# முதல் இடைத் தேர்வு – 2022

7 - ஆம் வகுப்பு **தமிழ்** பதிவு எண். | | | | | | |

காலம் : 1.30 மணி மதிப்பெண்கள் : 50

**I சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 5 X 1 = 5

1. வாழை, கன்றை ............... .
அ) ஈன்றது ஆ) வழங்கியது இ) கொடுத்தது ஈ) தந்தது

2. முதலெழுத்து ஒன்றி வரத் தொடுப்பது......... .
அ) எதுகை ஆ) மோனை இ) இயைபு ஈ) முரண்

3. பேச்சுமொழியை ............ வழக்கு என்றும் கூறுவர்
அ) இலக்கிய ஆ) உலக இ) நூல் ஈ) மொழி

4. பகைவரை வெற்றி கொண்டவரைப் பாடும் இலக்கியம்........ .
அ) கலம்பகம் ஆ) பரிபாடல் இ) பரணி ஈ) அந்தாதி

5. 'நெறி' என்னும் சொல்லின் பொருள் .................. .
அ) வழி ஆ) குறிக்கோள் இ) கொள்கை ஈ) அறம்

**II நிரப்புக.** 5 X 1 = 5

1. ஆறு அறிவுடைய மனிதர்களை ..................... என்பர்.
2. மழலை பேசும் ................. அழகு.
3. பெயரறியா என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..............
4. மகரக்குறுக்கம் இடம் பெறும் சொல் ஒன்று ............ .
5. ஒன்றுக்கு மேற்பட்டவற்றைக் குறிப்பது ............. .

**III பொருத்துக.** 5 X 1 = 5

| | | | |
|---|---|---|---|
| 1. | நச்சரவம் | – | நோன்பு |
| 2. | முக்கனி | – | தெலுங்கு |
| 3. | கிளைமொழி | – | மிகுந்த சுவை |
| 4. | விரதம் | – | விடமுள்ள பாம்பு |
| 5. | அதிமதுரம் | – | மா, பலா, வாழை |

**IV பிழையைத் திருத்திச் சரியாக எழுதுக.** 5 X 1 = 5

1. அரசர்கள் நல்லாட்சி செய்தார்.
2. மேகங்கள் சூழ்ந்து கொண்டது.
3. குழலி நடனம் ஆடியது
4. பசு கன்றை ஈன்றன.
5. கோவலன் சிலம்பு விற்கப் போனாள்,

**V ஏதேனும் 3 வினாக்களுக்கு மட்டும் விடையளி.** 3 X 3= 9

1. 'குற்றியலுகரம்' என்னும் சொல்லைப் பிரித்து விளக்கம் தருக.
2. குற்றியலுகரத்தின் வகைகள் யாவை?
3. பால் எத்தனை வகைப்படும் அவை யாவை?
4. திணை எத்தனை வகைப்படும் அவை யாவை?

**VI எதிர்பாலுக்குரிய பெயர்களை எழுதுக.** 6 X 1 = 6

1. மகளிர் X ..................... .
2. அரசன் X ..................... .
3. பெண் X ..................... .
4. மாணவன் X ..................... .
5. சிறுவன் X ..................... .
6. தோழி X ..................... .

**VII கீழ்க்காணும் சொற்களை உயர்திணை, அஃறிணை என வகைப்படுத்துக.** 10X1/2=5

வயல், முகிலன், குதிரை, கயல் விழி, தலைவி, கடல் ஆசிரியர், புத்தகம், சுரதா, மரம்.

| உயர்திணை | அஃறிணை |
| --- | --- |
| | |

**VIII ஏதேனும் 5 வினாக்களுக்கு மட்டும் விடையளி.** 5 X 2 = 1(

1. தமிழ்மொழியைக் கற்றவரின் இயல்புகளை எழுதுக.
2. தமிழ்நாட்டின் இயற்கை வளங்களாகக் கவிஞர்கள் கூறுவன யாவை?
3. வட்டார மொழி எனப்படுவது யாது?
4. காட்டுப்பூக்களுக்கு எதனை உவமையாகக் கவிஞர் சுரதா குறிப்பிடுகிறார்?
5. சிறுவர்களுக்கு நாவல்பழம் கிடைக்க உதவியோர் யாவர்?
6. கரடி 'அனைத்துண்ணி' என அழைக்கப்படுவது ஏன்?
7. இந்திய வனமகன் என அழைக்கப்படுபவர் யார்? அவர் எந்த ஆற்றின் நடுவே காட்டை உருவாக்கினார்?